**Minutes of Public Hearing conducted on 14.10.2025 at 10.00 A.M. at Nagammal Thirumana Mandapam, Mela Kadayanallur Village, Kadayanallur Taluk, Tenkasi District with respect to the proposed project of Rough Stone and Gravel Quarry by Thiru. V.M. Sundariah, over an extent of 3.00.0 Hect at S.F. No. 91 part 2, Ariyanaygipuram Village, Kadayanallur Taluk, Tenkasi District.**

**Details of participants in this meeting.**

| | | |
|---|---|---|
| 1. | Tmt. Vaishnavi Paul, I.A.S. | Sub Collector,<br>Tenkasi. |
| 2. | Tmt. M. Nellaimathy, M.Tech | District Environmental Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Tenkasi. |
| 3. | Public and Government Officials | Copy of Attendance enclosed |

The Public hearing under EIA Notification, 2006 for the proposed project of Rough Stone and Gravel Quarry by Thiru. V.M. Sundaraiah, over an extent of 3.00.0 Hectares at S.F. No. 91 part 2, Ariyanayagipuram Village, Kadayanallur Taluk, Tenkasi District was conducted on 14.10.2025 at 10.000 A.M. at Nagammal Thirumanamandapam, Melakadayanallur Village, Kadayanallur Taluk, Tenkasi District.

The District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Tenkasi welcomed the Sub Collector, Tenkasi, Public and industry representatives who have attended the public hearing. She informed that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification 2006. In this regard, public notices were already published in "Dinathanthi Tamil edition & The New Indian Express" English edition on 11.09.2025 and also announcement was made to the public through vehicle announcement and distributing pamphlets.

She also stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority (SEIAA), Tamilnadu.

Then the Environment consultant explained about the proposed project of Thiru. V.M. Sundaraiah Rough stone and gravel quarry to the public gathered in the hall through a power point presentation.

Then, the District Environmental Engineer has requested the public to express their views one by one on the project orally or in writing and also informed that the public views are recorded and will be sent to the SEIAA along with the meeting minutes.

Subsequently, the public has started expressing their views with respect to the project as follows.

1. **Thiru. V. Haridass, Melakadayanallur**

   He stated that there are about 2000 construction workers working in the Melakadayanallur area. At present there is difficulty in procuring the coarse and fine aggregates required for the construction works since it is procured from far distance. He also stated that this if quarry operations is permitted then it will be benifited for about 2000 construction workers and hence expressed this heartfelt support to the project.

2. **Thiru. Raja , Vice secretary , Puthiya Tamilagam Party, Tenkasi District**

   He stated that during the power point presentation the consultant has informed that there are no villages located within the 10 kilometre but Menakshipuram village located in about 1 kilometre, Valasai Village located at about 1.5 kilometer and Bala arunachalapuram Village located at about half kilometre. He also added that there are about 10 villages around the hillock and in these villagers mostly depend on livestock's such as goat and cattle for their livelihood. He further stated that that this is only land available as Government promboke land and livestock's were grassed in this land and if the rough stone quarry is leased then during blasting operation thrown stone fractions might cause injury or death of livestock's. Similar kind of incident was already happened in the past and it might also happen in future. These blasting operations might also affect these villages and livelihood of the villagers.

   He stated that majority of construction workers were residing in about 10 villages namely Meenakshipuram , Chithambaraperi, Sanganaperi , Valasai, Balaarunachalapuram , Rameshpuram and Kanmaniyapuram and the information regarding this public hearing was not known to them. He requested the government officials to inform these 10 villages properly and conduct Public hearing in some other date then it would be better. He also

further added that no construction workers or residents of nearby villages were participated in this Public hearing and insisted to have investigation on the attendees of the meeting then to issue the quarry lease.

Then, the District Environmental Engineer, Tenkasi asked for any other public opinion and also requested to submit the petitions so that it will be consolidated. A Total of about 98 petitions were received during the public hearing.

Further Thiru. Raja , Vice secretary , Puthiya Tamilagam Party, Tenkasi District has stated these petitions were not genuine and it was not from the workers.

Then, the District Environmental Engineer, Tenkasi concluded the public hearing by thanking the attendees and the meeting was ended.

16/10/25

District Environmental Engineer
Tamilnadu Pollution Control Board,
Tenkasi

17/10/25

Sub Collector,
Tenkasi.

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், அரியநாயகிபுரம் கிராமம், புல எண். 91 (பகுதி 2), விஸ்தீரணம் 3.00.0 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள திரு. V.M. சுந்தரையா அவர்களின் உத்தேசிக்கப்பட்ட கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்து 14.10.2025 அன்று காலை 10.00 மணியளவில், தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், மேலக் கடையநல்லூர் கிராமம், தி/ள். நாகம்மாள் திருமண மண்டபத்தில் வைத்து நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.

இக்கூட்டத்தில் பங்கு பெற்றவர்களின் விபரம்

1. திருமதி. வைஷ்ணவி பால், இ.ஆ.ப. - சார் ஆட்சியர், தென்காசி

2 திருமதி. ம. நெல்லைமதி, எம்.டெக், - மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தென்காசி.

3. பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் நபர்கள் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

*****

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், அரியநாயகிபுரம் கிராமம், புல எண். 91 (பகுதி 2), விஸ்தீரணம் 3.00.0 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள திரு. V.M. சுந்தரையா அவர்களின் உத்தேசிக்கப்பட்ட கல் மற்றும் கிராவல் குவாரிக்கு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் அப்பகுதி பொதுமக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டமானது, தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், மேலக் கடையநல்லூர் கிராமம், கடையநல்லூர் - பண்பொழி சாலையில் அமைந்துள்ள தி/ள். நாகம்மாள் திருமண மண்டபத்தில் வைத்து 14.10.2025 அன்று காலை 10.00 மணியளவில் துவங்கியது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தென்காசி அவர்கள் பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமையேற்க வருகை புரிந்த சார் ஆட்சியர், தென்காசி அவர்களையும், அரசு அதிகாரிகளையும் மற்றும் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு பங்கேற்று கருத்துக்களை தெரிவிக்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும் வரவேற்றார். இந்தக் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கான ஏற்பாடுகள் அனைத்தும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006-ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

தொழிற்திட்டம் தொடர்பான விளக்கங்களை, மேற்படி தொழிற் நிறுவனம் சார்பில் பொதுமக்களிடம் விளக்குமாறு கேட்டுக்கொண்டதை தொடர்ந்து, திரு. V.M. சுந்தரையா அவர்களின் உத்தேசிக்கப்பட்ட கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல்

ஆலோசகர், அமையவுள்ள திட்டம் தொடர்பாக புள்ளி விளக்க காட்சி (Power Point Presentation) மூலம் விவரமாக பொதுமக்களுக்கு விளக்கினார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொதுமக்கள் ஒருவர் பின் ஒருவராக தங்களுடைய பெயர் மற்றும் ஊரினை விபரமாக தெரிவித்து, கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ தெரிவிக்கலாம் எனவும், தெரிவிக்கப்படும் கருத்துக்கள் அனைத்தும் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட கருத்துக்கள் அனைத்தும் இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பிட்டு ஆணையத்திற்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய்மொழியாக பொதுமக்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு.

1. திரு. வி.ஹரிதாஸ், அவர்கள் தமது கருத்தினை தெரிவிக்கும் பொழுது, குவாரி அமையவுள்ள மேலக் கடையநல்லூர் பகுதியில் சுமார் 2000-க்கும் மேற்பட்ட கட்டிட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இங்கு கட்டிடப் பணிகளுக்கு தேவையான மூலப்பொருட்களான கற்கள் மற்றும் மணல் ஆகியவை வெகு தொலைவில் இருந்து கொண்டு வரப்படுவதால் மிகவும் சிரமமாக உள்ளது. எனவே மேற்படி குவாரி தொழில் இந்தப் பகுதியில் அமைவதால் கட்டிட தொழிலுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். எனவே மேற்படி திட்டம் இந்த பகுதியில் அமைய அனைவரும் மனமார ஆதரவு தருமாறு கேட்டுக்கொண்டார்.

2. <u>திரு. ராஜா, தென்காசி மாவட்ட துணை செயலாளர், புதிய தமிழகம் கட்சி</u>

திரு. ராஜா அவர்கள் தமது கருத்தினை தெரிவிக்கும் பொழுது, குவாரி அமையவுள்ள பகுதியில் இருந்து சுமார் 10 கி.மீ. தூரத்திற்கு கிராமங்கள் எதுவும் அமையபெறவில்லை என உத்தேசிக்கப்பட்ட கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர் தெரிவித்தார். ஆனால் மீனாட்சிபுரம் என்ற கிராமம் சுமார் 1 கி.மீ. சுற்றளவுக்குள்ளேயே அமைந்துள்ளது. அடுத்ததாக வலசை என்ற கிராமம் சுமார் 1.5 கி.மீ சுற்றளவில் அமைந்துள்ளது. பால அருணாச்சலபுரம் சுமார் ½ கி.மீ. தூரத்தில் தான் உள்ளது.

மேற்படி அமையவுள்ள கல்குவாரியைச் சுற்றிலும் 10 கிராமங்கள் உள்ளன எனவும், மேற்கண்ட கிராம மக்கள் பெரும்பாலும் ஆடு மற்றும் மாடுகளை வைத்து தான் பிழைப்பு நடத்தி வருகிறார்கள் எனவும் கூறினார். மேலும் அவர் பேசுகையில், தற்பொழுது அரசு புறம்போக்கு நிலமாக குவாரி அமையும் பகுதி உள்ளது. மேற்படி குவாரி அமைய உள்ள இடத்தில் தினமும் ஆடு மாடுகள் மேய்ந்து விட்டு வருகின்றன. மேற்படி இடத்தில் குவாரிக்காக வெடி வைக்கும் பொழுது, வெடிக்கும் பொழுது சிதறும் கற்கள் அங்கு மேய்ச்சலுக்கு வரும் ஆடு மாடுகள் மீது விழுந்து இறக்க நேரிடும். இது போன்ற சம்பவங்கள் ஏற்கனவே நடந்து உள்ளன என்றும், இனிமேலும் அது போன்று நடக்க வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் வெடி வைப்பதால் அருகில் உள்ள கிராமங்களும், பொதுமக்களும் பாதிக்கப்படுவார்கள். எனவே கிராம மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனவும், பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் இங்கு நடைபெறுகிறது என 10 கிராம மக்களுக்கும் தெரியாது எனவும் குறிப்பிட்டார். எனவே குவாரி அமையவுள்ள பகுதியில் அமைந்துள்ள சுமார் 10 கிராம மக்களுக்கும் முறையான தகவல் கொடுத்து, இந்த தேதியில் இந்த இடத்தில் வைத்து பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெறும் என அறிவிப்பு கொடுத்து மீண்டும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் கட்டிட தொழிலாளர்களோ, 10 கிராம பொதுமக்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை என தெரிவித்தார். மேலும் அவர் கூறும் பொழுது, உரிய விசாரணை செய்து குவாரியை ஏலம் விடுவதற்கு ஏற்பாடு செய்யுமாறும் கேட்டுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, எழுத்துப் பூர்வமான மனுக்கள் ஏதேனும் அளிப்பதாக இருந்தால், இக்கூட்டத்தில் அளிக்கலாம் என மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், தென்காசி அவர்கள் கூறியதைத் தொடர்ந்து மொத்தம் 98 மனுக்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தில் பெறப்பட்டது.

இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தென்காசி அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறியவுடன், பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நிறைவுபெற்றது.

16/10/22

மாவட்டசுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடுமாசுகட்டுப்பாடுவாரியம்,
தென்காசி.

சார் ஆட்சியர்,
தென்காசி.